**புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் | தொடர்ந்துவரும் ஆண்டில் இலங்கை பொதுத்துறை | இலங்கை பொதுத்துறை |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாததால், செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 377,590 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 102,475 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்த அதேநேரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மற்றும் காசிற்கு சமமான பெறுமதி ரூபா 275,115 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும். | கணக்கீட்டு நியமம் 02 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பிரிவின் பிரகாரம் முழு வகை சொத்துக்களும் ஒரே நேரத்தில் மீள்திப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையால் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,180 தேறிய பெறுமதியுடைய கணனிகள் மற்றும் துணைக்கருவிகள் மாத்திரம் 2022 பெப்ரவரி 28 இல் ரூபா 743,750 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டதால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 486,570. மீள்மதிப்பீட்டு இலாபம் காட்டப்பட்டிருந்தது. மேலும், அந்த மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 148,750 தொகை பெறுமானத்தேய்வாக கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டது. குறிப்பிடப்பட்ட மீள்மதிப்பீடு தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும் போது நியம ஏற்பாடுகள் பின்பற்றப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சாதாரண பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்ட ரூபா 102,475 கொண்டு செல்லும் தொகையுடனான நானாவித சொத்துக்களின் 10 உருப்படிகளை விற்பனை செய்ததன் காரணமாக ஏற்பட்ட ரூபா 84,175 நட்டம் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக கணனிகள் மற்றும் துணைக்கருவிகளின் மீள்மதிப்பீட்டின் மூலம் கிடைக்கும் | 2021 ஆம் ஆண்டில் சாதாரண பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்ட சொத்துக்களின் விற்பனையின் மூலம் ஏற்பட்ட ரூபா 84,175 நட்டம் மூலதன இலாம்/ நட்டமாக இனங்காணப்பட்டிருந்தது. அந்த ஆண்டின் இறுதிக்குள் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் ஏற்பட்ட ரூபா 486,569 மூலதன இலாபம் ஆனது மூலதன இலாயம்/ நட்டக் கணக்கிற்கு செலவு | சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் ஏற்படும் நட்டம் அந்த ஆண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இலாபத்திற்கு அப் பெறுமதி சீர்செய்யப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதே பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வைக்கப்பட்டுள்ளது. ரூபா 402,393 தொகை மூலதன இலாயம்/ நட்டக் கணக்கின் தேறிய விளைவாக இனங்காணப்பட்டுள்ளது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் டிஎம்ஏ/2009(2) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32,489,006 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கற்பனை சொத்துகளின் மீள்மதிப்பீடு மற்றும் கிரயம் பதிவு செய்யப்படும் வகையில் நிலையான சொத்துக்களின் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை, பதிலாக சொத்து உருப்படிகளின் எண்ணிக்கையைக் காட்டும் பிரதான பொருளிருப்பு மாத்திரமே பேணப்பட்டிருந்தது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கற்பனை சொத்துகளின் மீள்மதிப்பீட்டு தொகைகள் மற்றும் கிரயங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்கு பதிவேடொன்றை தயாரித்து பேணுவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு முறையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களும் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் பறப்படுதல்களை சரிபார்க்க வேண்டிய போதிலும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சட்ட உத்தியோகத்தரின் வருகை மற்றும் புறப்படுதல் நேரங்கள் அதிகாரசபையின் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. வருகை மற்றும் புறப்பதல் நேரத்தை எந்த வகையிலும் சரிபார்க்காமல், மீளாய்வாண்டின் போது ரூபா 841,455 கூட்டுமொத்த தொகை மொத்த சம்பளம் மற்றும் படிகளாக அந்த | சட்ட உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட மாதாந்த கடமைகள் தொடர்பான அறிக்கையில் திருப்தி அடைந்து, அவருக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டது. இது தொடர்பில் பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் சட்ட உத்தியோகத்தரின் வருகை மற்றும் புறப்படுதல் நேரங்களை பதிவு செய்வதற்கு அதிகாரசபையின் முகாமைத்துவம் | சட்ட உத்தியொகத்தரின் வருகை மற்றும் புறப்படுதல் நேரம் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தரிற்கு செலுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கும். | |
| (இ) | 2019 ஏப்ரல் 22 ஆம் திகதிய 09/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 2019 யூலை 01 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகளுக்கு இணங்க, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,500 தொகையான மாதாந்த இடைக்கால படி பகுதியளவிலான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படக் கூடாது. எனினும் 2019 யூலை முதல் 2021 திசெம்பர் வரையிலான 30 மாத காலப்பகுதியில் இடைக்கால படிகளாக அதிகாரசபையின் 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 690,648 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் குறித்த படி செலுத்தப்படும் என 2019 யூலை 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் 09/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததால் 2019 யூலை மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அப் படி செலுத்தப்பட்டுள்ளது. 2022 மார்ச் 29 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இப் படிக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் ஊடாக மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இடைக்கால படியாக செலுத்தப்பட்ட ரூபா 690,648 தொகை அதனை பெற்றவர்களிடமிருந்தோ அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்தே அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 யூன் 15 ஆம் திகதிய 21/Misc (032) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2021 யூன் 16 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் செயலாளரின் எம்ஜஎன்/ஏடிடி/எஸ்ஈஈ/ நிர்வாகம்/16/21 ஆம் இலக்க கடிதம் | 2021 யூன் முதல் 2021 ஆகஸ்ட் வரையிலான 03 மாத காலத்திற்கு சுகாதார சேவை பதவியணியினரிற்கு மாதாந்தம் செலுத்தப்படுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்த ரூபா 7,500 விசேட மாதாந்த படி அதிகாரசபையின் பதவியணியினரிற்கு உரித்தில்லாத போதிலும் அதிகாரசபையின் பதவியணியினரில் 12 ஊழியர்களுக்கு குறித்த 03 மாத காலப்பகுதியின் போது விசேட படியாக ரூபா 262,375 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரசபையானது வரிசை அமைச்சின் கீழ் இயங்கியதால், சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அனைத்து பதவியணி உறுப்பினர்களிற்கும் அந்த படிக்கு உரித்து உள்ளது. அதிகாரசபையின் தலைவருக்கும் சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் பின்னர், அதிகாரசபையின் உத்தியோகத்தர்களிற்கு படி செலுத்தப்படும் என தலைவரினால் எழுத்து மூலம் | இடைக்கால படியாக செலுத்தப்பட்ட ரூபா 262,375 தொகை பெற்றுக்கொண்டவர்களிடமிருந்தோ அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்தே அறவிடப்பட வேண்டும். |

தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2021 யூன் முதல் 2021 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதிக்கு அதிகாரசபையின் அனைத்து நிரந்தர பதவியணி உறுப்பினர்களிற்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் காலத்திற்கு காலம் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அதிகாரசபையின் பதவியணியினர் தொடர்ச்சியாக கடமைக்கு அறிக்கையிட்டிருந்தனர்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,523,419 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,337,220 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 186,199 தொகையான வீழ்ச்சியொன்றை அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவினம் முன்னைய ஆண்டிற்கு எதிராக முறையே 62 சதவீதம் மற்றும் 65 சதவீதத்தால் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதன மானியங்கள் ரூபா 5,960,583 அல்லது 264 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதே நேரம் ஆளணி வேதனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் முறையே முறையே 62 சதவீதம் மற்றும் 65 சதவீதத்திற்கு சமமான ரூபா 5,171,969 மற்றும் ரூபா 2,806,599 ஆல் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 1948 Quit Line சேவையை மேம்படுத்துவதற்காக ரூபா 1,380,500 தொகையும், அந்த | ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 02 ஆலோசனை | சேவையின் உற்பத்தித்திறனை அளவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | சேவையை மேம்படுத்துவதற்காக ரூபா 2,022,500 தொகையும், ஆலோசனை சேவையை பேணுவதற்காக ரூபா 1,205,085 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 4,608,085 தொகையொன்றை அதிகாரசபை செலவிட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட 9,025 தொலைபேசி அழைப்புக்களில் 2,797 இற்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரம் 1,084 அழைப்புக்கள் இலங்கை மதுவரி திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் பணியகம் மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை போன்ற நிறுவனங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன. 2,797 அழைப்புக்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான முறைமை எதுவும் காணப்படவில்லை, எனவே, அந்தச் சேவையின் உற்பத்தித் திறனை அதிகாரசபையால் அளவிட முடியவில்லை. | உத்தியோகத்தர்களால் ஆலோசனை சேவை வழங்கப்பட்டது, ஆனால் 2021 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டிருந்ததால் பெறப்பட்ட அழைப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அதன் பிரகாரம் அதிகாரசபையானது 23 ஆலோசனை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைக்கான சான்றிதழ் கற்கைநெறி மூலம் பயிற்சி அளித்தது. மாலை 4.00 மணிக்குப் பின்னர் தொலைபேசி உரையாடல்களின் மூலம் அவர்கள் தாமாகவே முன்வந்து அவர்களது சேவையை வழங்கினர். ஆலோசனை பெற்றவர்களில் சிலர் மாத்திரம் மீண்டும் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்கின்றனர். மனித மற்றும் பௌதீக வளங்கள் குறைவாக இருப்பதால், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் கடினமானதாகும். | நடவடிக்கை எடுப்பதன் மூலம் சேவை மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1948 Quit Line சேவைக்காக நாளாந்தம் பெறப்பட்ட அழைப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அந்தத் தகவல்கள் உயர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரால் கண்காணிக்கப்படும் என்பதைச் சரிபார்க்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றை பதிவுசெய்து முறையாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. எனவே, ஆலோசனை சேவை மூலம் பெறப்பட்ட அழைப்புக்கள் மற்றும் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களின் சரியானதன்மையை சரிபார்க்க முடியவில்லை. | 1948 Quit Line சேவை மூலம் நாளாந்தம் பெறப்படும் அழைப்புக்கள் தொடர்பான தரவு சேகரிக்கப்பட்டு, மாதாந்தம் பெறப்பட்ட அழைப்புக்களின் எண்ணிக்கை தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. அந்த முன்னேற்ற அறிக்கைகள் அதிகாரசபையின் தலைவர் என்ற முறையில் என்னால் சான்றளிக்கப்படுகின்றதுடன் ஆலோசனை சேவைகளைப் பெற்றவர்கள் பற்றிய தகவல்கள் ஆலோசனை உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படுகின்றன. | 1948 Quit Line சேவை தொடர்பான நாளாந்த தகவல்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படும் வகையில் பதிவேடொன்று அறிமுகப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் அந்த பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றுடன் அதிகாரசபை கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உலகளாவிய வயது வந்தோர் புகையிலை ஆய்வின் (GATS) இறுதி அறிக்கை 2021 ஒக்தோபர் 31 இற்கு முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2022 மே 24 வரையிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | உலக சுகாதார நிறுவனத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2021 ஒக்தோபர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2019/2020 காலப்பகுதிக்கான குறித்த கணக்கெடுப்பின் உண்மைத் தாள் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டது. | உலகளாவிய வயது வந்தோர் புகையிலை கணக்கெடுப்பின் இறுதி அறிக்கையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட ரூபா 2,979,900 நிதி உதவியைப் பயன்படுத்தி நிலையான புகையிலை பயிர்ச்செய்கை இல்லாத மாவட்டங்களை உருவாக்கும் ஆரம்ப செயற்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய 02 மாவட்டங்களில் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. எனினும், அந்த நிகழ்ச்சிகளுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பாக அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை, மேலும் மின்னஞ்சல் மூலம் கூறுவிலைகள் கோரப்பட்டதால் பெறுகை குழுவை விட அதிகாரசபையின் தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களால் வழங்கப்பட்ட உணவு மற்றும் தங்குமிடம் தொடர்பாக ரூபா 1,350,104 தொகை செலுத்தப்பட்டது. எனவே, பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆரம்ப செயற்திட்டம் கொரோனா தொற்றுநோய் காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. தபால் திணைக்களத்தின் ஊடாக கடிதங்களை முறையாகப் பரிமாறிக் கொள்ள முடியாத காரணத்தினாலும், 2021 சனவரி 21 முதல் மார்ச் 31 வரை இச் செயற்திட்டத்தை நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததாலும், நிதிகளை பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் நிகழ்ச்சியை விரைவாக நடாத்த வேண்டியிருந்தது. எனவே, கூறுவிலைகள் மின்னஞ்சல்கள் மூலம் கோரப்பட்டன. நிகழ்ச்சிக்காக திட்டமிடப்பட்ட திகதிகளில் பெறக்கூடிய ஹோட்டலில் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. உயர் அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர், மேலும் அவர்களின் வசதிக்காக திகதிகள் பட்டியலிடப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட ஹோட்டல் கொரோனா தடுப்பு தொடர்பான சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு இணங்க ஒப்புக்கொண்டது. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகை செயன்முறை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |